**கூடுதல் இயக்குநர், முன்னாள் படைவீரர் நல இயக்ககம், 22, ராஜா முத்தையா சாலை, சென்னை–3 அவர்களின் செயல்முறை ஆணைகள்.**

...

முன்னிலை : மேஜர்.வி.எஸ்.ஜெயகுமார் (ஓய்வு),
கூடுதல் இயக்குநர்.

இருப்பிடம் : சென்னை–600 003.

...

செயல்முறை ஆணை எண். 17640/2017/நிர்1 நாள் : 09.07.2020

பொருள்: பணியமைப்பு – முன்னாள் படைவீரர் நலத்துறை – கருணை அடிப்படையில் பணி நியமனம் – திரு. கு. கண்ணன் த/பெ (கா/செ) வே. குமரவேல் – தற்காலிக இளநிலை உதவியாளராக பணி நியமனம் – இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன் முறைப்படுத்துதல் – ஆணைகள் வெளியிடுதல் – தொடர்பாக.

சுட்டு:
1. இணை இயக்குநர், முன்னாள் படைவீரர் நல இயக்ககம், சென்னை–03 அவர்களின் செயல்முறை ஆணை எண்.17640/2017/நிர்1, நாள் : 11.09.2018.
2. அரசாணை (3ப) எண் : 19, பொது (முன்னாள் படைவீரர்)த் துறை, நாள் : 29.06.2020.

*******

**ஆணை :**

சுட்டு (1)–ல் காணும் செயல்முறை ஆணையின்படி, திரு.கு. கண்ணன், த/பெ (கா/செ) வே. குமரவேல் என்பவர் தற்காலிக இளநிலை உதவியாளராக சென்னை–3 முன்னாள் படைவீரர் நல இயக்ககத்தில் நியமனம் செய்யப்பட்டு 19.09.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணியேற்பு செய்து பணிபுரிந்து வருகிறார்.

அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்தத் துறை, நாள். 01.08.2018–ன்படி கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்ய, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினை பெறுவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளதால் திரு. கு. கண்ணன் என்பவருக்கு கருணை அடிப்படையில் முன்னாள் படைவீரர் நலத்துறையில் தனியர் பணியில் சேர்ந்த நாளான 19.09.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் பணியினை வரன்முறை செய்து சுட்டு (2)–ல் காணும் அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளது. இவ்வரசாணையின்படி, தனியர் முன்நாளிட்டு பணிவரன்முறை செய்யப்பட்டதால் ஆண்டு ஊதிய உயர்வு / ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் அவற்றை பெற அரசு விதிகளின்படி பெறத்தகுதியுடையவர் எனவும் ஆணைகள் வழங்கப்படுகிறது.

2....

திரு. கு. கண்ணன், என்பவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியேற்பு செய்த நாளான 19.09.2018 முற்பகல் முதல் பணிவரன் முறைப்படுத்தப்பட்டு தொடர்ச்சியான மூன்று ஆண்டு காலத்தில், இரண்டு ஆண்டு காலங்கள் தகுதிகாண் பருவ காலத்தில் வைக்கப்படுகிறார்.

தகுதிகாண் பருவகாலத்தில் கீழ்க்கண்ட தேர்வுகளில் தேர்ச்சி பெறுதல் வேண்டும்.

1. தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல்.
2. பவானிசாகர் அரசு அலுவலர் அடிப்படை பயிற்சி.

தனியரின் பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட விவரம் பணியாளரின் பணிப்பதிவேடு மற்றும் பணிவரன்முறைப்படுத்தும் பதிவேட்டிலும் உரிய பதிவுகள் செய்திடல் வேண்டும்.

இச்செயல்முறை ஆணை பெற்றுக்கொண்டமைக்கு ஏற்பளிப்பு செய்தல் வேண்டும்.

(ஒம்)/- வி.எஸ்.ஜெயகுமார்.
கூடுதல் இயக்குநர்.

<u>பெறுநர்</u>

திரு. கு. கண்ணன்,
இளநிலை உதவியாளர்,
முன்னாள் படைவீரர் நல இயக்ககம்,
சென்னை -600 003.
— இயக்குநரின் நேர்முக உதவியாளர் மூலமாக.

<u>நகல் :</u>

1. இயக்குநரின் நேர்முக உதவியாளர், முன்னாள் படைவீரர் நல இயக்ககம், சென்னை – 600 003.

செயல்முறை ஆணையினை மேற்படி பணியாளருக்கு சார்பு செய்து அவரிடம் இருந்து பெறப்பட்ட ஏற்பளிப்பினை பெற்றிடுமாறும், சுட்டு (2) ல் குறிப்பிடப்பட்ட அரசாணை நகல், திரு.கு.கண்ணன், இளநிலை உதவியாளரின், அசல் ஆவணங்கள் அவரிடம் வழங்கி ஏற்பளிப்பு பெற்றிட இயக்குநரின் நேர்முக உதவியாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

1. பள்ளிக் கல்வி (எஸ்.எஸ்.எல்.சி.) மதிப்பெண் சான்றிதழ் எண். SEC 1130540 .
2. அசல் வாரிசு சான்றிதழ் எண். D.Dis.No.5205/2017/A1, Dated: 30.06.2017.
3. காலம் சென்ற வே. கும்ரவேல் அவர்களின் அசல் இறப்பு சான்றிதழ் எண்.115/17.
4. கருணை அடிப்படையில் பணி நியமனம் பெற ஆண்டிப்பட்டி வட்டாட்சியரால் வழங்கப்பட்ட ஒருங்கிணைந்த சான்றிதழ்

3....

2. சம்பள கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை–600 001.
3. நிர்வாகம் பிரிவு – 3.
4. முதன்மை ஆணைத் தொகுப்பு.
5. இருப்புக்கோப்பு/உபரி.

//ஆணைப்படி அனுப்பலாகிறது//

இயக்குநரின் நேர்முக உதவியாளர்.

13/7/2020

13/7/2020